**OS 200/2024**
(Old OS No.120/2018)
PW1 - கிருஷ்ணா த/பெ சுப்பராயன்
25.11.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனது மகன் பெயர் S.K.முரளிமாறன் என்றால் சரிதான். எனது மகன் தான் இவ்வழக்கின் பிரதிவாதி கோணகுப்பத்தான் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரதான். எனது மகன் 27.10.2022ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது மகன் இறந்துவிட்ட காரணத்தினால் என்னையும் 3, 4, 5 வாதிகளையும் தரப்பினராக இவ்வழக்கில் நாங்கள் சேர்ந்தோம் என்றால் சரிதான். 3ம் வாதி இறந்த முரளிமாறனின் மனைவி என்றால் சரிதான். 4 மற்றும் 5ம் வாதி மகள் மற்றும் மகன் என்றால் சரிதான். என் மகன் முரளிமாறன் எதற்காக இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் கோணகுப்பத்தான் அவர்கள் தனது மகன் மீது வழக்கு தாக்கல் செய்தததால் எனது மகன் அவர் மீது வழக்கு இந்த வழக்கினை தாக்கல் செய்தார். நான் தாக்கல் செய்துள்ள திருத்தம் செய்யப்பட்ட வழக்குறையில் விலாசம் பகுதியில் 2 முதல் 5 வாதிகள் அனைவரும் இசுக்கழிகாட்டேரி, கீழ்பென்னாத்தூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் என்ற முகவரியில் வசிப்பதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். தற்காலமாக பெங்களூரில் வசித்து வருவதாகவும் மேற்படி வழக்குரையில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். நான் எந்த வருடத்திலிருந்து நான் பெங்களூரில் வசித்து வருகிறேன் என்றால்  தற்சமயம் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சுமார் 50 வருடங்களாக பெங்களூரில் வசித்து வருகிறேன் என்றால் 35 வருடமாக வசித்து வருகிறேன் துர்கா பரமேஸ்மரி கோவில் பெங்களூரில் கட்டியுள்ளேன் அதனால் அங்கு வசித்து வருகிறேன். துர்கா பரமேஸ்வரி கோவில் எந்த வருடத்தில் நான் பெங்களூரில் கட்டினேன் என்றால் 1988ம் ஆண்டு கட்டினேன். இசுக்கழி காட்டேரி கிராமத்தை சேர்ந்தவன் என்பதற்கு ஏதேனும் ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் வைத்திருந்தேன் தற்போது நான் பல இடங்களில் செல்வதால் வேண்டாம் என்று நீக்கிவிட்டேன். நான் பழைய ஆதார் கார்ட் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகன், மருமகள், பேரபிள்ளைகள் ஆகியோர் இசுக்கழிகாட்டேரியில் வசித்து வருவதற்காக ஏதேனும் ஆவணங்கள் சம்ர்பித்துள்ளேனா என்றால் இல்லை.

இவ்வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 196 சர்வே எண் 196/1 என்று சொல்கிறேன். இவ்வழக்கு சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 17 சென்ட் ஆகும். மேற்படி 1 ஏக்கர் 17 சென்டின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் மேற்கு பகுதியில் மணி என்பவரின் நிலமும், கிழக்கில் ராமர் என்பவர் நிலமும், வடக்கில் கோவில் தனியார் சொத்தும், தெற்கில் தனியார் சொத்தும் உள்ளது. மேற்படி தெற்கில் அந்த நிலம் யாருடையது என்று எனக்கு ஞாபகம் இல்லை.

மேற்படி தாவா சொத்து யாருக்கு பாத்தியம் என்றால் மாணிக்கம் என்கிற தலவிரிச்சானுக்கு சொந்தமானது. பட்டாவிலும் மேற்படி மாணிக்கத்தின் பெயர் என்னவாக உள்ளது என்றால் மாணிக்கம் தலவிரிச்சான் என்றுதான் உள்ளது. மேற்படி தலவிரிச்சான் பெயர் உள்ள பட்டாவின் எண் தெரியுமா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் எனது வழக்குரையில் தலவிரிச்சான் பெயரில் தான் பட்டா உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் தவறு மாணிக்கம் என்கிற தலவிரச்சான் பெயரில் தான் பட்டா உள்ளது. மேற்படி மாணிக்கம் என்கிற தலவிரிச்சான் பெயர் கொண்ட பட்டாவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தலவிரிச்சான் என்கிற மாணிக்கத்திற்கு மேற்படி பட்டாவை தவிர வேறு எந்த விதத்தில் தாவா சொத்து அவருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றால் தெரியாது. ஒரு சொத்து வாங்கும் போது அந்த சொத்து விற்பவரின் பெயரில் பட்டா உள்ளது பத்திரம் உள்ளதா என்ற ஆராய்ந்து தான் சொத்து வாங்குவோம் என்றால் சரிதான். எனது மகன் மாணிக்கம் என்கிற தலவிரிச்சானிடம் இருந்து சொத்து பெறும்போது பட்டா, பத்திரம் ஆகியவற்றை பார்த்து உறுதி செய்து சொத்தை வாங்கினாரா என்றால் சரிபார்த்து தான் வாங்கினார். அது மாதிரி சரிபார்த்து வாங்கும்போது மாணிக்கம் என்கிற தலவிரிச்சான் பெயரில் என்ன பத்திரம் இருந்தது என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. தலவிரிச்சான் என்பவரும் மாணிக்கம் எனபவரும் ஒரு நபர் தான் என்ற ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மாணிக்கம் என்கிற தலவிரிச்சான் என் அத்தை மகன் உறவு முறை என்றால் சரிதான். 20.12.2005 தேதியிட்ட வாசாஆ1

கிரய பத்திர முன்னிலைக்கு தான் முரளிமாறன் இவ்வழக்கின் சொத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பட்டா தவறுதலாக மு.தலவிரிச்சான் என்பவரின் பெயரில் மட்டும் தான் வந்துள்ளது என்றால் சரியல்ல. 20.12.2005 தேதியிட்ட கிரய பத்திரத்தில் முரளிமாறன், மாணிக்கம் என்பவர் தான் தலவிரச்சான் என்ற மாணிக்கம் என்பவர் பெயரில் ஒரு பொய்யான பத்திரம் தயார் செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல.

வாசாஆ1 பத்திரம் 2005ல் வாங்கிய பின் முரளிமாறன் பெயரில் பட்டா மாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான். முரளிமாறன் பெயரில் ஏன் பட்டா மாறவில்லை என்றால் நீதிமன்ற வழக்கு வந்ததால் பட்டா கொடுக்கவில்லை. நீதிமன்ற வழக்கு என்றால் எந்த வழக்கு என்றால் பிரதிவாதி வழக்கு தொடுத்துவிட்டார். கோணகுப்பத்தான் என் மகன் முரளிமாறன் மீது தொடுத்த வழக்கின் வழக்கு எண் என்னவென்றால் தெரியவில்லை. பிரதிவாதி எந்த வருடத்தில் என் மகன் மீது வழக்கு தொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. என் மகன் சொத்தை வாங்கிய பின்பு பட்டா மாற்றத்திற்காக வருவாய் துறையினரை தான் சந்திக்க வேண்டும் என்றால் சரிதான். என் மகன் எப்போது வருவாய் துறையினரை சந்தித்து பட்டா மாற்றக்கோரி விண்ணப்பம் செய்தார் என்றால் ஞாபகமில்லை. என் மகன் இதுவரை வழக்கு சொத்தை அவரது பெயரில் பட்டா மாற்றம் செய்ய முயற்சி செய்யவில்லை என்றால் வழக்கு போட்டதால் பட்டா பெறவில்லை.

(பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோள்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/– (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்